

தேவர் பிலிம்ஸ்

# யானைப்பாகன்

டைரக்ஷன்...M.A.திருமுகம் + தயாரிப்பு..சாண்டோ M.M.A.சின்னப்பா தேவ

தேவர் பிலிம்ஸ்

# "யானைப்பாகன்"

*நடிகர்கள் :*

உதயகுமார், P. S. வீரப்பா, S. V. சுப்பையா, V.R. ராஜகோபால், சாண்டோ M.M.A. சின்னப்பாதேவர், R. M. சேதுபதி.

*நடிகைகள் :*

B. சரோஜாதேவி, S. D. சுப்புலட்சுமி, மனோரமா, மற்றும் தேவர் பிலிம்ஸ் குழுவினர்.

*நடனம் :*

ரீடா, கலாவதி.

*கதை, வசனம் :*

ச. அய்யாப்பிள்ளை,

*இசையமைப்பு :*

K. V. மஹாதேவன்,

*ஒளிப்பதிவு :*

C. V. மூர்த்தி.

*தயாரிப்பு :*

சாண்டோ M.M.A. சின்னப்பாதேவர்.

*டைரக்ஷன் :*

M. A. திருமுகம்.

*ஸ்டுடியோ :*

விஜயா & வாஹினி.

Recorded on Westrex Sound System

# யானைப்பாகன்

## கதைச்சுருக்கம்

நீலகிரி மலைப்பகுதியில் உள்ள ஓர் எஸ்டேட்டுக்குச்சொந்தக் காரர் ஏகாம்பரம். அவர் வேட்டைக்குப்போய், யானையிடம் அகப்பட்டுக்கொள்கிறார். இச்சமயம் அவ்வழியே வந்த சங்கர் என்ற வாலிபன் அந்த யானையோடு போராடி, ஏகாம்பரத்தைக் காப்பாற்றுகிறான். ஏகாம்பரம் அவனைப்பார்த்து "நீயாரப்பா?" என்று கேட்க, அதற்கு சங்கர் "நான் ஒரு யானைப் பாகன்" என்று சொல்கிறான். ஏகாம்பரம் தன் மகன் காணாமல் போய் விட்டதால்-நீ என்னோடு இருக்கவேண்டும் என்று சொல்லி தன் வீட்டிற்கு அழைத்துவருகிறார்.

வீட்டிற்கு வந்த ஏகாம்பரம், தன் தங்கை கௌரியிடமும் கந்தன் என்ற வேலைக்காரனுக்கும் சங்கரை அறிமுகப்படுத்தி வைக்கிறார். சங்கர்-"இந்த எஸ்டேட்டில் யானைப் பாகனாக இருக்க விரும்புகிறேன்" என்று சொல்ல-ஏகாம்பரம் சம்மதிக் கிறார். அன்று முதல் சங்கரும் கந்தனும் நண்பர்களாகின்றார்கள்.

ஒருநாள்...ஏகாம்பரம் எஸ்டேட்டுக்கு வந்துகொண்டிருந்த மேகநாதன் என்பவன், காட்டில் மானைச் சுட்டுவிட-அதைக் கண்டு சங்கரும் கந்தனும் அவனிடம் சண்டைப்போட்டுப் பின் னர் ஏகாம்பரத்திடமும் வந்து சொல்லுகின்றனர். ஏகாம்பரம் "மேகநாதன் என் பழைய நண்பர் மகன்" என்று சொல்கிறார். அங்கு சங்கருச்கும் மேகநாதனுக்கும் ஏற்பட்ட தகராறினால் சங்கர் கோபத்தோடு வெளியேற, கௌரியும் ஏகாம்பரமும் போய் சமாதானம் சொல்லி அழைத்துவருகின்றனர். அந்த சமயம்-"கௌரி ஏகாம்பரத்தின் தங்கையல்ல" என்ற விவரம் சங்கருக்குத் தெரிகிறது.

சிங்கபாளையம் ஜமீன்தார் மகள் லீலா தன் தந்தையின் அனுமதியோடு, அவள் தோழி வள்ளியுடன் ஏகாம்பரம் எஸ்டேட் டுக்கு வருகிறாள். வரும் வழியில் வள்ளியைப் பிரிந்து தான்மட் டும் குதிரையில் வரும்போது கரடியிடம் சிக்கிக் கொள்கிறாள். அச்சமயம் சங்கர் வந்து லீலாவைக் காப்பாற்றி அனுப்பி வைக் கிறான்.

லீலா ஏகாம்பரத்திடம் தன் தந்தை கொடுத்த கடிதத்தைக் கொடுக்க, ஏகாம்பரம் பார்த்துவிட்டு கௌரியிடம் "இந்தப் பொண்ணு ஜமீன்தார் மகள்". ஏதோ புத்தகம் எழுத நம்ம எஸ் டேட்டெல்லாம் சுத்திப் பார்க்க வந்திருக்கு. இவள் இங்கு தங்கு வதற்கு ஏற்பாடு செய்" என்றார்.

லீலாவை விட்டுப் பிரிந்த வள்ளியை கந்தன் கண்டு அழைத்து வருகிறான்.

மறுநாள்...லீலா காடுகளைச் சுற்றிப் பார்க்க குதிரையில் புறப் பட்டுப் போகிறாள். வழியில் குதிரை மிரண்டு கட்டுக்கடங்காமல் போகவே சங்கர் வந்து காப்பாற்றுகிறான். லீலாவும் சங்கரும் காதலர்களாகின்றனர்.

ஏகாம்பரம் எஸ்டேட் பிஸினஸ் எல்லாம் கவனித்துவரும் மேகநாதன் சங்கர் அனாதையாக வந்தவன் என்பதை ஒருவன் மூலம் தெரிந்து அவன் இருந்தால் தனக்கு இடஞ்சல் செய்வான், அதனால் அவனை எப்படியாது தொலைக்கவேண்டும் என்று திட் டம் போடுகிறான்.

இந்நிலையில்-ஏகாம்பரம் லீலாவை சங்கரோடு காடுசுற்றிப் பார்க்க அனுப்பிவைக்கிறார். காடுகளைச் சுற்றிப்பார்த்து வருகின் றனர்; லீலாவும் சங்கரும்.

இதற்கிடையில் காட்டு மரங்களை வெட்டிக் கொண்டிருந்த திருடர்களிடம் போய் மேகநாதன் அகப்பட்டுக் கொள்ள-அவனை குகைக்கு இழுத்துப் போகின்றனர். அந்த திருடர்கள் தலைவன் பீமன் மேகநாதனை அடித்துவிடுகிறான். பின்னர் அடையாளம் கண்டு "இவர் என் பழைய நண்பர்" என்று தன் ஆட்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறான்.

மரங்கள் திருடுபோய்விட்ட சமாசாரத்தை சங்கர் வந்து ஏகாம்பரத்திடம் சொல்ல-உடனே அதை கவனிக்கச் சொல் கிறார் ஏகாம்பரம். இச்சமயம் சிங்கபாளையம் ஜமீன்தார் வந்து தான் அமெரிக்கா செல்வதால், லீலா உங்கள் பாதுகாப்பில் இருக்கட்டும் என்று சொல்ல, ஏகாம்பரம் சந்தோஷப்படுகிறார்.

பீமன் மேகநாதனிடம் இனி முகமூடி போட்டுக்கொண்டு திருடுவோம் என்றதும் மேகநாதன் சரி என்கிறான். அதே போல் மேகநாதன் முகமூடியுடன், ஆட்களைக் கூட்டிவந்து மரத்தை வெட்டும் சமயம், சங்கர் ஆட்களுடன் வந்து தாக்குகிறான். இருசாராருக்கும் சண்டை நடக்கிறது. சங்கர் முகமூடியோடிருக் கும் மேகநாதனைத் தாக்க-சமாளிக்கமுடியாமல் ஓடி, முகமூடியை எடுத்து மறைத்துவிட்டு சங்கரிடம் வந்து நல்லவன்போல் நடிக் கிறான்.

சங்கர் ஆட்கள் திருடர்களில் ஒருவனைப் பிடித்துக் கட்டி வைத்திருக்க-அங்கு சங்கர் வந்து விசாரிக்கிறான். திருடன் உண் மையைச் சொல்லப்போகும் சமயம் மேகநாதன் திருடனைக் கொன்று விடுகிறான். நடந்த சம்பவத்தை எல்லோரும் வந்து ஏகாம்பரத்திடம் சொல்ல ஏகாம்பரம் மேகநாதனைக் கண்டிக்

கிருர். அத்தோடு லீலாவையும், "சங்கரோடு சேர்ந்துகொண்டு சண்டைக்குப் போனது தவறு" என்று கண்டிக்கிருர்.

ஒருநாள்...லீலாவும், சங்கரும் நெருங்கிப் பழகுவதைப் பார்த்துவிட்ட ஏகாம்பரம், சங்கரைப் பார்த்து "நீ யானைப் பாகன்-லீலா ஜமீன்தார் மகள் அவளைக் காதலிப்பது தவறு! அவளை நீ கண்டிப்பாக மறக்கத்தான் வேண்டும்" என்று கடுமையாக சொல்லிவிட்டுப் போய்விடுகிருர். தன் வீட்டிற்குப் போய் லீலாவையும் கண்டிக்கிருர். அப்படியிருந்தும் லீலா அவருக்குத் தெரியாமல் வந்து சங்கரை சந்தித்துவிட்டுப் போகிருள்.

ஏகாம்பரம் சங்கரிடம் பாண்டவமங்கலம் ஜமீன்தாருக்காக யானை பிடிக்க ஏற்பாடு செய்யச் சொல்கிருர். அதன்படி சங்கர் காட்டில் குழிகளை வெட்டி யானைகளைப் பிடித்துவிடுகிருன். இதற்காக பாண்டவமங்கலம் ஜமீன்தார் விருந்துவைக்கிருர்.

மேகநாதன், பீமன் இருவரும் காட்டு விழாவில் நடக்கும் போட்டியில் சங்கரைத் தொலைத்துவிட திட்டம் தீட்டுகின்றனர். திட்டப்படி மேகநாதனும் பீமனும் போட்டியில் கலந்து சங்கரோடு மோதித் தோல்வியடைகின்றனர். அவமானமடைந்த மேகநாதன் சங்கரை வழிமறித்து முகமூடி உடையை அவனுக்குப் போட்டு, ஏகாம்பரத்திடம் கொண்டுவந்து "சங்கர்தான் முகமூடித் திருடன்" என்று நிரூபித்து விடுகிருன். ஏகாம்பரம் சங்கரை வீட்டைவிட்டுத் துரத்திவிடுகிருர். சங்கர் "உண்மையான முகமூடித் திருடனைக் கண்டுபிடித்து உங்கள் முன் ஒப்படைக்கிறேன்" என்று ஏகாம்பரத்திடம் சபதம் செய்துவிட்டுப் போகிருன்.

சங்கர் தொலைந்தான் என்று மேகநாதனும் பீமனும் சந்தோஷப்படுகின்றனர். அவன் இல்லாததால் தங்கள் இஷ்டப்படி எஸ்டேட்டைக் கொள்ளையடிக்கத் திட்டம் தீட்டகின்றனர்...

திட்டம் நிறைவேறிற்ரு?

உண்மையான முகமூடித் திருடனை சங்கர்
கண்டு பிடித்தாஞு?

ஏகாம்பரம் காணுமல் போன தன் மகனைச் சந்தித்தாரா?

கௌரி தன் மகளை அடைந்தாளா?

பதில் திரையில்......!

# யானைப்பாகன்

## பாடல்கள்

இயற்றியவர் : 1 பாடியவர்கள் :
அ. மருதகாசி ஏ. எல். ராகவன் &
டி. எல். ராஜேஸ்வரி & பார்ட்டியார்

(கோரஸ்)

கோரஸ்: ஐயா ஹைஹ !.........

பெண்: ஓ !.........

கோரஸ்: ஐயா ஹைஹ !.........

பெண்: ஜிங்கிடி குல்லா !

கோரஸ்: ஜிங்கிலி ஜிம்பாலா !...

ஆண் : அம்பாலோ !

கோரஸ்: பந்தியில் மட்டும் முன்னே...
பெரும் படையைக் கண்டால் பின்னே
இவர் சங்கதியெல்லாம்...
சந்திக்கு சந்தி சிரிக்குதுபெண்ணே !

கோரஸ்: ஜிங்கிலி ஜிம்பாலாலா !

ஆண்: அம்பாலோ !

கோரஸ்: ஜாமுதே !

ஆண்கள்: தீனமாதா !

ஆண்: தேரேயானே தரன்னே......
மரனதஸரனன்னே......
மரனதஸரனன் பவனதியன்னே......

கோரஸ்: ஹ.........

ஆண்: அஞ்சாறு யானையை
நெஞ்சாலே தாக்குவேன்
அஞ்சாமலே சிங்கம் வந்தா
பந்தாடிக் காட்டுவேன்.

பெண். திராதி தீரன் நானென்று
கதையளப் பார்
தேளைக் கண்டுவிட்டால்
ஓட்டமெடுப்பார் (பந்தி)

கோரஸ்; ஹ........

ஆண்: மமம தேரியன்னே...
மமமதசெயன்னே...
லரன தகஸமுதகியரென்னே...

பெண். முண்டாசு கட்டுவார்
முண்டாவைத் தட்டுவார்
குண்டோதரன் ஆகாரத்தைக்
கண்டாலே வெட்டுவார்.

ஆண்: மண்டூகம் இவருக்கு ஈடு
யாருமில்லே.
மன்மதக் குஞ்சு இதைப்
பாரு கண்ணலே! (பக்தி)

இயற்றியவர். 2 பாடியவர்:
அ. மருதகாசி பி. சுசீலா

லீலா: நெஞ்சினிலே இன்பம் கொஞ்சிடுதே—வளம்
பொங்கிடும் வனத்தின் சிங்காரமெல்லாம்
கண்ணாரக் காணும் சந்தோஷத்தால்...... (நெஞ்சி)

எண்ணப் பறவை விரிக்குது சிறகை
எட்டிப் பறந்து ரசிக்குது அழகை
என்னை மயக்கிடுதே! இங்கே வா!
—என்றே அழைத்திடுதே! (நெஞ்சி)

பாயும் குதிரை வேகத்தை மிஞ்சி
பாவை என் மனம் தாவுது முந்தி
மாயம் இது ஏனோ! எல்லாமே
அழகின் செயல்தானோ? (நெஞ்சி)

இயற்றியவர் : 3 பாடியவர் :

கோவை குமாரதேவன் டி. எம் சௌந்தரராஜன்

சங்கர்: பதினாறும் நிறையாத பருவமங்கை—காதல்
பசியூட்டி வசமாக்கும் ரதியின் தங்கை!
குதித்தாடி மருண்டோடும் கலைமானோ?—இளங்
குமரிகளும் மயங்கும் சிலைதானோ?—அவள் (பதினாறும்)

வண்ணமுகக் கண்ணிரண்டும்
நட்சத்திரமோ?—அது
வாவென்று அழைப்பதென்ன
விசித்திரமோ?
மின்னுகின்ற பல்வரிசை
முத்துச் சரமோ?......யாரும்
மெச்சுகின்ற குணங்களேதான்
சொத்து சுகமோ!......அவள் (பதினா)

வண்டுகளே கண்டிடாத
வசந்த முல்லை!—அவள்
வந்ததுமே பறந்தோடும்
காதல் தொல்லை.
எண்ணம் போல வாய்த்து—
விட்டால் ஈடு இல்லை!—என் (எண்)

பின் என்றைக்குமே
இன்பத்துக்கு ஏது இல்லை—அவள் (பதினாறு)

இயற்றியவர் : 4 பாடியவர்கள் :

அ. மருதகாசி டி. எம். சௌந்தரராஜன்,
பி. சுசீலா.

லீலா: துள்ளி விழும் அருவியைப் போல்
கண் பார்வை என்மேல் விழுதே!

சங்கர்: உன் அழகைப் பருகிடவே
என் பார்வை உன்மேல் விழுதே!
வெள்ளம்போல் பெருகுது அன்பு
உள்ளத்தில் உன்னை நினைக்கையிலே

லீலா: ஓ!...சொல்லாமல் சொல்லுதே
அதை உங்கள் தோற்றமே!

இருவரும்: உல்லாசமாகவே...... (துள்ளி)

சங்கர்: ஆசையெனும் வானத்தில் தாவி
ஆடுது ஊஞ்சல் என் மனமே!

லீலா: வீசாத தென்றலும் அதனாலே வீசுமே!
விளைவாகும் இன்பமே!

சங்கர்: கள்ளமில்லா காதலர் வாழ்வில்
காண்பவை யாவும் ஆனந்தமே!

லீலா: ஓ......கண்காணும் காட்சியே
உயிர்க் காதல் ஆட்சியே!

இருவரும்: நமக்காகும் சாட்சியே!

லீலா: துள்ளி விழும் அருவியைப்போல்
கண் பார்வை என்மேல் விழுதே;

சங்கர்: உன் அழகைப் பருகிடவே
என் பார்வை உன்மேல் விழுதே!

இயற்றியவர்: 5 பாடியவர்கள்:
புரட்சிதாசன் பி. லீலா & பார்ட்டி

(நடனப்பெண்கள்)

பெண்: பாடுபட்ட தொழிலாளி
பசிக்குதென்றான்—இதைப்
பார்த்துப் பார்த்து முதலாளி
பல்லை இளித்தான்

அவன் தேடிவைத்த பொருளையெல்லாம்
கன்னம் வைத்து
திருடிச் சென்று ஒரு மனிதன்
வாழ்ந்திருந்தான்!

உலகம் சொன்னதுங்க...
உண்மைதானுங்க;—இதை
உணர்ந்தவனும் கொள்ளையடிப்பது
பொழைக்கத் தானுங்க!
ஓ............

பெண்கள்: டிங்கிரிடியான்......

பெண்: ஹ............

ஆண்டுகள் பலவாக அரசாண்டு
போனவங்க......
அதிகார தோரணையில்
கொள்ளையடிச்சாங்க!

பெண்: வேண்டாத கதைகள் சொல்லி
விளக்கம் பல கூறி
சோம்பேறியாய் பலபேர்
கொள்ளையடிச் சாங்க! (உலகம்)

பெண்: ஹ............

பெண்கள்: டிங்கிரிடியான்......

பெண்: கட்சியின் பெயராலே
லட்சியங்களை மறந்து
இஷ்டம்போலவே சிலபேர்
கொள்ளையடிச்சாங்க!

உழைச்சு பட்டினியாலே
தவிச்சவங்க
பார்த்து ஒரு நாளில்......
பட்டப் பகல்தனிலே துணிஞ்சு
கொள்ளையடிச்சாங்க!...... (உலகம்)

இயற்றியவர்:
புரட்சிதாசன்

6

பாடியவர்கள்:
சீர்காழி கோவிந்தராஜன்
பி. சுசீலா.

சங்கர்: செங்கனி வாய் திறந்து
சிரித்திடுவாய்
தித்திக்கும் தேன் குடமே
செண்பகப் பூச்சரமே!

லீலா: செங்கனி வாய் திறந்து
சிரித்திடுவாய்
தித்திக்கும் தேன் குடமே
செண்பகப் பூச்சரமே!

சங்கர்: பொங்கும் எழில் பருவம்
பெண்களின் இளம்பருவம்;

லீலா: சிந்தையில் உறவாடும்
இன்ப உருவம்!

சங்கர்: கன்னியின் ஆவல்தன்னைக்
கடைக்கண் சொல்லும் கண்ணே !

லீலா: எண்ணத்தைக் கிள்ளும்—அந்த
இன்பத்தைச் சொல்லும் முன்னே [செங்]

லீலா: அலைமோதும் உணர்வாலே
கனலாகவே !

சங்கர்: உள்ளம் அடிவானம் தொடும்
ஆசைக் கடலாகவே ;

லீலா: நிழலாகி உருவான
காதல் தன்னை...

சங்கர்: நினைந்து நினைந்து இன்பம்
இணைந்து பருகுமுன்னே ! (செங்கனி)

இயற்றியவர்: 7 பாடியவர்கள் :

ஆலங்குடி சோமு ஏ. எல். ராகவன்,
டி. எல். ராஜேஸ்வரி

கந்தன்: ஆம்பளைக்கி பொம்பளை
அவசியந்தான்...... —இதிலே
அடங்கிக் கிடக்கு ஆயிரமாயிரம்
ரகசியந்தான்—ரகசியந்தான்

வள்ளி: மூவாசை வெறுப்பவங்க
முனிவர்களா இருப்பவங்க

கந்தன்: என்ன ?

வள்ளி: மண்ணு......பொண்ணு......பெண்ணு
மூவாசை வெறுப்பவங்க
முனிவர்களா இருப்பவங்க
மங்கையர்கள் துணையில்லாமே
வாழவில்லையா?

கந்தன்: முன்னாளில் ஒரு முனிவர்
மேனகை மேலாசை வச்சு
பொன்னான தபசை விட்டு
ஓடவில்லையா?......அதனால்......... (ஆம்பளை)

வள்ளி: கண்ணுமுன்னே மரங்களெல்லாம்
கவலையேதுமில்லாமே
தன்னந்தனியாக மண்ணில்
வளரவில்லையா ?...

கந்தன்: பொண்ணும் ஆணும் மரத்திலுண்டு
பேதமில்லாக் காதல் கொண்டு
பூப்பதுவும் காய்ப்பதுவும்
புரியவில்லையா ?......அதனால்...... (ஆம்பளை)

வள்ளி: மாம்பழந்தான் சர்க்கரையில்
சேராட்டாக் கசந்திடுமா ?
வீம்புப் பேச்சில் என் மனசை
வசியம் பண்ண முடிஞ்சிடுமா ?...

கந்தன்: காம்பில்லாத கோடாலி
காரியத்துக்கு உதவிடுமா ?
சாம்பிராணியானாலும்
நெருப்பில்லாமே புகைஞ்சிடுமா ?

வள்ளி: ஆமாமா !...
அவசியமும் தெரிஞ்சு போச்சு
ரகசியமும் புரிஞ்சு போச்சு

இருவரும்: ஆம்பளைக்குப் பொம்பளை
அவசியந்தான் !

இயற்றியவர்: 8 பாடியவர்கள் :
கோவை குமாரதேவன் பி. சுசீலா பார்ட்டி

லீலா: ஹ............

பெண்கள்: ஹ............

லீலா: உயர்வு தாழ்வு இல்லாமலே
உலகைப் பகைத்துக்கொள்ளாமலே
ஒற்றுமையாக உழைத்தேதான்
வாழ வேணுங்க,

பெண்கள்: உயர்வு தாழ்வு இல்லாமலே
உலகைப் பகைத்துக் கொள்ளாமலே
ஒற்றுமையாக உழைத்தேதான்
வாழ வேணுங்க.

லீலா: வேலை வெட்டி பாக்காமலே
விபரம் சொன்னுக் கேக்காமலே—வீணு
சிலர்-ஆளை மேய்த்து ஏய்த்து வந்த
அந்தக் காலம் மறைந்து போனதாலே (உயர்வு)

லீலா; ஹ............

பெண்கள்: ஹ............

நாடு நகரமெல்லாம் வாழ்ந்திடவே
நல்ல இன்பம் வெள்ளம்போல்
பொங்கி ஓடிவரவே

ஓயாது உழைத்த வயறு காயாது
தகுந்த கூலி பெறவே
என்றைக்கும் மாருத நலமடைந்து
மகிழ்வுதனைக் காணவேணுமென்ருல் (உயர்வு)

லீலா: ஹ............

பெண்கள்: ஹ............

லீலா: நீதி நேர்மை அன்பு நியாயமெல்லாம்
நிமிர்ந்து நிற்கும் மலைபோல
நிலைத்து ஓங்கி விளங்க
பார்க்காத சொர்க்க வாழ்வை
பாருலகே நமக்கு தினம் வழங்க
நாட்டிலே பாலாறும் தேனும்
பாய்ந்து சுகம் காணவேணுமென்ருல் (உயர்வு)

இயற்றியவர்.
அ. மருதகாசி



பாடியவர்கள்;
ஜமுனாராணி

(நடனப்பெண்)


யாருக்கும் அஞ்சாமே
காரியத்தைப் பார்த்திடலாமே
நாம் போகும் பாதையிலே
தடையேதும் இனியில்லே
கேட்பாரும் மேய்ப் பாரும்
கிடையாது இங்கே! (யாருக்கும்)

நண்டுக்குத் திண்டாட்டம்
நரிக்கெல்லாம் கொண்டாட்டம்
நாமின்று இருக்கும் நிலையும்
அந்தக் கதையை நினைவூட்டும்!
நைஸாகத் தேட்டையிட்டு
பைசாவைத் தேடி வாழ்வோமே!
கேட்பாரும் மேய்ப் பாரும்
கிடையாது இங்கே! (யாருக்கும்)

இனிமேலே யோகந்தான்
எப்போதும் லாபம்தான்
அநியாயம், நியாயம் பாவம்
புண்யம் நமக்கு ஒன்றேதான்
மனம்போன மார்க்கமெல்லாம்
துணிவாக நாமும் செல்வோமே! (யாருக்கும்)

சிவாஜி பிரிண்டர்ஸ், சென்னை-14; போன்: 83423.

| | | |
|---|---|---|
| பாடல்கள் ஒலிப்பதிவு | ... | T. S. ரங்கசாமி (மெஜஸ்டிக்) |
| ஒலிப்பதிவு | ... | W. நரசிம்மமூர்த்தி L. C. & S. E |
| கலை | ... | C. ராகவன் |
| செட்டிங்ஸ் | ... | C. குப்புசாமி நாயுடு |
| | | K. ஸ்ரீனிவாசன் |
| | | T. நீலகண்டன் |
| உடைகள் | ... | ரஹ்மான், P. முனுசாமி |
| | | R. S. மணி |
| மேக்கப் | ... | P. P. சந்திரா, ஜெயராமன் |
| | | T. P. ஜெகதீசன் |
| நடனப் பயிற்சி | ... | தங்கராஜ், ஹீராலால் |
| சண்டைக் காட்சிகள் | ... | சோமு & பார்ட்டி |
| புகைப்படங்கள் | ... | R. N. நாகராஜராவ் |
| விளம்பரம் | ... | எலிகண்ட் பப்ளிசிடீஸ் |
| ஸ்டுடியோ புரோக்ராம்ஸ் | ... | G. சுந்தரம் |
| | | C. S. பிரகாஷ்ராவ் |
| அரங்க அலங்காரப் பொருட்கள் | ... | சினி கிராப்ட்ஸ் |
| லேபரட்டரி & பிராஸஸிங் | ... | விஜயா லேபரட்டரி |
| | | S. R. ரங்கநாதன் |
| எடிட்டிங் | ... | M. A. திருமுகம் |
| | | M. G. பாலுராவ் |
| | | M. A. மாரியப்பன் |
| புரொடக்ஷன் நிர்வாகம் | ... | S. M. கணேசன் |
| | | S. R. ராசாமி ஐயர் |
| உதவி டைரக்டர்கள் | ... | நாஞ்சில் S. ராஜேந்திரன் |
| | | M. G. பாலுராவ் |
| | | M. A. மாரியப்பன் |


எமது
அடுத்த வெளியீடு
கொங்கு நாட்டு தங்கம்
டைரக்ஷன்... M.A. திருமுகம் · கதை. வசனம்... ஆரூர்தாஸ்
தயாரிப்பு... சாண்டோ M.M.A. சின்னப்பா தேவர்